**ம.சா .1 ஸ்ரீநிவாசமூர்த்தி த/பெ.விவேகானந்தன்**

**எதிரி ஆஜர்.**

**C.M.P** 141/2025 **கடந்த** 26.06.2025 **அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரிதரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1) தாவா காசோலையான காசோலை எண். 262592 எங்கு வைத்து எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்று அசல் மனுவிலோ, சாட்சிய வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் 08.06.2018 ம் தேதி எதிரி எங்களது அலுவலத்தில் வந்து கொடுத்தார். மேற்படி விவரத்தை எனது மனுவிலோ, சாட்சி வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை. மேற்படி காசோலை எதிரியால் பூர்த்தி செய்யப்பட்டாதா என்பது பற்றி எனக்கு தெரியாது. அசல் மனுகாசோலை என் முன்பாக பூர்த்தி செய்யப்படாதது என்றாலும்,என் முன்பாக கையொப்பம் செய்யப்படாதது என்றாலும் சரிதான்.

2) 07.08.2018 ம் தேதி எதிரிக்கும் எனக்கும் முதலாளி தொழிலாளி உறவு இல்லை. எதிரிக்கும் எனக்கும் முதலாளி தொழிலாளி உறவு முறை எந்த காலகட்டத்தில் தொடக்கி எந்த காலகட்டத்தில் முடிந்தது என்றால் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. ஆனால் 2010 ம் ஆண்டு முதல் முதலாளி தொழிலாளி என்ற உறவு இல்லை. எனது கம்பெனிக்கும் எதிரிக்கும் இடையே 2016 ம் ஆண்டு இறுதியாக ஒப்பந்தம் செய்தோம். 2016 ம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம் எத்தனை ஆண்டுகளுக்கு போடப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 2010 ஆண்டிலிருந்து 2016 ஆண்டு ஒப்பந்த கால அவகாசம் வரை எங்களுக்குள் பணம் பரிமாற்றங்கள் அனைத்தும் வங்கி பரிவர்த்தனை மூலமாக நடைபெற்றது என்று சொன்னால் சரிதான்.

3) மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் 3 முதல் 9 வரையிலான கடனுறுதி சீட்டுகள் வங்கி காசோலைகள் மூலமாக வங்கி பரிமாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான கடனுறுதி சீட்டு மூலமாக வங்கி பரிவர்த்தனை செய்யப்பட்ட காசோலைகளின் தொகைகள் அனைத்தும் எனக்கும் எதிர் மனுதாரருக்கும் ஜாப் ஒர்கிங் ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான கடனுறுதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகள் வெவ்வேறு தேதிகளில் கொடுக்கப்பட்டது என்றால்

**Sd/-M.Charles Albert**

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

ம.சா.ஆ. 3,4, 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகள் ஒரு தேதியிலும், ம.சா.ஆ. 6,7,8,9 ல் குறிப்பிடப்பட்டுள்ள காசோலைகள் வெவ்வேறு தேதியில் கொடுக்கப்பட்டதாகும்.

4) எதிர் மனுதாரர் எனது கம்பெனிக்கு ஜாப் ஒர்க் சம்மந்தமான கூலி வாரம் வாரம் கொடுக்கப்பட்டதா என்ன கால இடைவெளியில் கொடுக்கப்பட்டது என்றால் எதிரி மனுதாரருக்கு தேவைப்படும் போது ஒரு மாதத்திற்குள் கொடுப்போம். எதிர் மனுதாரர் சராசரியாக ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தொகைக்கு ஜாப் ஒர்க் செய்து கொடுப்பார் என்றால் தற்போது ஞாபகமில்லை. சுமாராக கம்பெனியில் இருந்து எவ்வளவு தொகைக்கு ஜாப் ஒர்க் கொடுக்கப்படும் என்றால் ஞாபகமில்லை. அது சம்மந்தமான எனது கம்பெனி ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். அந்தஆவணங்கள் என் அலுவலகத்தில் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

5) எதிர்மனுதாரருக்கு ஜாப் ஒர்க் சம்மந்தமாக நடைபெற்ற அனைத்து தொடர்புகளும் என்னுடைய மேலாளர் திருவாசகத்திற்குதான் நேரடியாக தெரியும் எனக்கு தெரியாது என்றால் தவறு. ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான ஆவணங்களில் உள்ள தேதிகளில் எதிர்மனுதாரர் எனது கம்பெனியில் உள்ள கட்டிடத்தில் தான் ஜாப் ஒர்க் செய்து வந்தார் என்றால் ஞாபகமில்லை. ஜாப் ஒர்க் செய்வற்கு 44 மிஷன் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. ரூ.7 இலட்சம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டது சம்மந்தமாக அந்த காலகட்டத்தில் எதிர் மனுதாரரிடம் ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணங்களும் பெற்றுக்கொண்டுள்ளேனா என்றால் நாங்கள் 2010, 2012, 2014 ஆகிய ஆண்டுகளில் தொழில் செய்வது சம்மந்தமாக தான் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான ஆவணங்கள் எதிர்மனுதாரர் தொழில் தொடங்குவதற்காகவும், முன்பணத்தொகை பெற்றதற்தாகவும் சங்கதிகள் குறிப்பிடபட்டதா என்றால் இல்லை.

6) எனது அசல் வழக்கானது ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.ம.சா.ஆ. 3 முதல் 9 வரையிலான சங்கதிகளும் ம.சா.ஆ.10 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதியும் முரண்பாடான சங்கதிகள் என்றால் சரிதான். ம.சா.ஆ- 10 ல் முன்பணம் தொகை ரூ.7 இலட்சத்தை மொத்தமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**Sd/–M.Charles Albert**

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

ம.சா.ஆ. 10ல் ஜாப் ஓர்க்காக கொடுக்கப்பட்ட தொகைதான்என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், புதிய தொழில் தொடங்குவதற்காகவும், அவரது அவசர தேவைக்காகவும் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான்.

7) எனது நிறுவனத்தில் யார் ஜாப் ஓர்க் கேட்க வந்தாலும், அவர்களிடம் பாதுகாப்பு கருதி மாற்றுமுறை ஆவணங்கள் வாங்கு வழக்கம் என்றால் இல்லை. அவ்வாறு மாற்றுமுறை ஆவணங்கள் வாங்குவது வழக்கம் என்றாலும் இவ்வழக்கிற்காக அதனை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 2014 காலகட்டகளில் நான் ஜாப் ஓர்க்காக கொடுக்கப்பட்ட தொகையினை மறைத்து ஏற்கனவே பாதுகாப்புக்காக பெறப்பட்ட காசோலையினை உற்பத்தி செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அலுவலகத்தின் வரவு -செலவு புத்தகத்தை பார்த்தால் தான் இவ்வழக்கின் உண்மை தன்மை தெரியவரும் என்று சொன்னால் சரிதான். நான் எதிரிக்கு அட்வான்ஸ் தொகை கொடுத்த தொகையை அந்த காலகட்டத்தில் எனது அலுவலகம் சம்மந்தமாக ஆடிட்டர் அறிக்கையினை பார்த்தால் உண்மை தன்மை தெரிவரும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை எனது தரப்பு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

8) ம.சா.ஆ. 3 முதல் 9 மற்றும் 11 வரையிலான ஆவணங்கள் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே ஜாப் ஓர்க் மூலமாக செல்லாகி விட்டதால் இது சட்டப்புறம்பான தொகை என்பதால் அதனை சட்டப்படி கேட்பதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/-M.Charles Albert**
நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்